**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXII Code of Criminal Procedure)**

கோயம்புத்தூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், கோயம்புத்தூர்.

| | | | |
|---|---|---|---|
| Spl.C.C.No. | 80/2019 | அரசு தரப்பு | அ.சா.53 |
| சாட்சியின் வாக்கு மூலம் | | எதிரி தரப்பு | |
| பெயர் | வித்தியமீனா | ஜாதி | |
| தகப்பனார் பெயர் | | சமயம் | |
| கிராமம் | | வயது | |
| தாலூக்கா | | தொழில் | |

Solemnly affirmed in accordance with the provisions of act X 1873 of 24th day of January 2020.

முதல் விசாரணை

நான் சென்னையில் வசித்து வருகிறேன். நான் 2011 ஆம் ஆண்டு ஆகஸ்ட் முதல் 2012 ஆம் வருடம் ஜுலை மாதம் வரை கோயமுத்தூர் ஐ.சி.ஐ.சி.ஐ வங்கி, திருச்சி சாலை கிளையில் உதவி மேலாளராக பணிபுரிந்து வந்தேன். கூடுதல் காவல் கண்காணிப்பாளர் எங்கள் வங்கி மேலாளருக்கு திரு.பொங்கலூர் பழனிசாமி அவர்களது சேமிப்பு கணக்கு விவர அறிக்கை வழங்குமாறு கேட்டிருந்தார். வங்கி மேலாளரின் அனுமதியோடு எங்கள் வங்கியின் சட்ட துறையில் அனுமதி பெற்று, அந்த சேமிப்பு கணக்கு எண்.001601507007 மற்றும் திருமதி வித்தியா கோகுலின் சேமிப்பு கணக்கு எண்.001601507999 மற்றும் ஒரு பி.பாலன் என்பவரது கடன் கணக்கு எண்.LTC BT 00013689478 ஆகிய கணக்குகளின் கணக்கு விவர அறிக்கையை கூடுதல் காவல் கண்காணிப்பாளருக்கு அனுப்பிவைத்தேன். 2006 ஆம் வருடத்திலிருந்து 2010 ஆம் வருடம் வரைக்கான மேற்படி கணக்குகளின் கணக்கு விவர அறிக்கைகளை வங்கி முகப்பு கடிதத்துடன் அனுப்பி வைத்தேன். நான் அனுப்பி வைத்த கணக்கு விவரம் Doc.46 ல் பக்கம் 1 முதல் 35 வரை உள்ளது. அந்த கோப்பு Ex.P.101 ஆகும். சேமிப்பு கணக்கு எண்.001601507007 திரு.என்.பழனிசாமி என்ற பெயரில் 16.9.2003 ஆம் தேதியில் துவங்கப்பட்டிருக்கிறது. 31.3.2006 ஆம் தேதியில் மேற்படி சேமிப்பு கணக்கின் துவக்க இருப்பு நிலை (Opening balance) ரூ.1,54,603.69 ஆகும். Ex.P.101 ல் பக்கம் 4 ல் அந்த விவரம்

உள்ளது. அது Ex.P.102 ஆகும். 31.3.2010 ஆம் தேதியில் மேற்படி சேமிப்பு கணக்கின் Closing balance ரூ.3,89,812.35 ஆகும். மேற்படி விவரம் Ex.P.101 ல் பக்கம் 35 ல் உள்ளது. மேற்படி பக்கம் 35 Ex.P.103 ஆகும். மேற்படி சேமிப்பு கணக்கில் உள்ள தொகைக்கு வங்கி விதிகளின்படி ஒவ்வொரு ஆறுமாத காலத்திற்கும் வட்டி சேர்த்துள்ளோம். அந்த விவரம் Ex.P.101 ல் உள்ளது. 27.9.2008 ஆம் தேதி அன்று ரூ.10,00,000/- காசோலை எண் 117752 மூலம் மாரிஸ் சிமெண்ட்ஸ் என்ற கணக்கிற்கு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி விவரம் Ex.P.101 ல் பக்கம் 21 ல் உள்ளது. அது Ex.P.104 ஆகும். 28.2.2007 ஆம் தேதி அன்று மேற்படி திரு.என்.பழனிசாமியின் சேமிப்பு கணக்கு எண்.001601507007 லிருந்து ரூ.40,00,000/- எடுத்து, குறுகியகால நிரந்தர வைப்புத் தொகையாக வைப்பீடு செய்யப்பட்டுள்ளது. அந்த குறுகியகால வைப்பீடு 6.3.2007 ஆம் தேதி அன்று கணக்கு முடிக்கப்பட்டு பின்னர் மற்றொரு வங்கி கணக்கான (ஐ.சி.ஐ.சி.ஐ வங்கி கணக்கு) நடப்பு கணக்கு எண்.001605001719 என்ற கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது. மேற்படி வைப்பீட்டுத் தொகை இருந்த காலத்திற்கான வட்டி தொகை ரூ.2411/- நடப்பு கணக்கு எண். 001605001719 ற்கு 6.3.2007 ஆம் தேதி அன்றே மாற்றப்பட்டுள்ளது. மேற்படி விவரம் Ex.P.101 ல் பக்கம் 6 ல் உள்ளது. அந்த பக்கம் Ex.P.105 ஆகும். என்னிடம் காண்பிக்கப்படும் கடிதம் மற்றும் வங்கி கணக்கு பட்டியல் எனது வங்கி கிளை மேலாளரால் கூடுதல் காவல் கண்காணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகும். வங்கி கணக்கு எண். 001605001719 என்பது மாரிஸ் சிமெண்ட் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்தின் கணக்கு ஆகும். 3.4.2004 ஆம் தேதி அன்று ரூ.20,00,000/- காசோலை எண்.144205 சக்தி பிலிம்ஸ் என்ற பெயருக்கு எங்கள் வங்கி காசோலை மூலமாக (Clearing) சென்றுள்ளது. மேற்படி வங்கி முகப்பு கடிதத்துடன் கூடிய விவரம் File No.16 ல் பக்கம் 1 முதல் 79 வரையான பக்கங்களில் உள்ளது. அது Ex.P.106 ஆகும். Ex.P.106 ல் பக்கம் 5 ல் மேற்படி ரூ.20,00,000/- சக்தி பிலிம்ஸ் என்ற பெயருக்கு Clearing செய்யப்பட்ட விவரம் கண்டுள்ளது. அது Ex.P.107 ஆகும். இது குறித்து கூடுதல் காவல் கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

## <u>எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

**Ex.P.101** ல் **14.1.2012** ஆம் தேதியிட்ட கடிதத்தில் பொங்கலூர் என் பழனிசாமி**,** திருமதி வித்தியாகோகுல்**,** திரு**.**பி**.**பாலன் ஆகியோரது கணக்கு விவர அறிக்கையை கூடுதல்

காவல் கண்காணிப்பாளருக்கு கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி மூன்று நபர்களின் கணக்கு விவர அறிக்கையை கூடுதல் காவல் கண்காணிப்பாளர் கேட்டதால்தான் நான் கொடுத்தேனா என்றால் ஆம். Ex.P.101 ஆவணத்தில் திரு.என்.பழனிசாமி அவர்களது கணக்கு விவர அறிக்கை மட்டுமே உள்ளது. திருமதி வித்தியா கோகுல் மற்றும் திரு.பாலன் ஆகியோர்களின் கணக்கு விவர அறிக்கை இல்லை என்றால் சரிதான். Ex.P.101 ல் பொங்கலூர் பழனிசாமி அவர்களின் கணக்கு விவர அறிக்கை, எந்த தேதியிலிருந்து எந்த தேதி வரையான கணக்கு விவர அறிக்கையை அனுப்பியுள்ளேன் என்றால் 30.9.2006 ஆம் தேதியிலிருந்து 31.3.2010 ஆம் நாள் வரைக்குமான கணக்கு விவர அறிக்கையை அனுப்பியுள்ளேன். ஆனால் அந்த கணக்கு விவர அறிக்கை 1.4.2006 லிருந்தே கோப்பில் உள்ளது. மேற்படி கணக்கு விவர அறிக்கையில் வைப்பீடு செய்த விவரமும், பணம் திரும்பப் பெறப்பட்ட விவரமும் உள்ளதா என்றால் ஆம் உள்ளது. மேற்படி கணக்கில் வைப்பீடு செய்த தொகை, திரும்ப எடுக்கப்பட்ட தொகை போக Balance Amount எவ்வளவு எனச் சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லப்பட்டுள்ளது. நான் முதல் விசாரணையிலும், கூடுதல் காவல் கண்காணிப்பாளர் விசாரணையிலும் திரு பொங்கலூர் பழனிசாமி அவர்களின் கணக்கில் சில Entries குறித்து மட்டுமே சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். High Value transaction ஐச் சொல்லியுள்ளேன். கூடுதல் காவல் கண்காணிப்பாளர் கேட்ட Entries குறித்துச் சொல்லியுள்ளேன். முதல் விசாரணையில் சொல்லியுள்ள சில சங்கதிகளை கூடுதல் காவல் கண்காணிப்பாளர் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சில விவரங்களை சொல்லியுள்ளேன். சில விவரங்கள் நான் சொன்னேனா, இல்லையா என்பது தற்பொழுது எனக்கு ஞாபகமில்லை. கூடுதல் காவல் கண்காணிப்பாளர் எங்கள் வங்கி கிளை மேலாளருக்கு அனுப்பிய வேண்டுதல் கடிதம் Ex.P.101 ல் இடம் பெறவில்லை என்றால் சரிதான். அந்த கடிதத்தில் பார்வை குறிப்பு Ex.P.101 ல் சொல்லப்பட்டுள்ளது. அந்த வேண்டுகோள் கடிதம் எங்கள் வங்கியில் உள்ளது. 14.1.2012 ஆம் தேதியில் நான் பொங்கலூர் பழனிசாமி, திருமதி.வித்தியாகோகுல், மற்றும் பி.பாலன் ஆகியோர்களது கணக்கு விவர அறிக்கைகளை கூடுதல் காவல் கண்காணிப்பாளருக்கு அனுப்பியுள்ளேனா என்றால் ஆம். மேற்படி மூன்று கணக்கு விவரங்களையும் வைத்து என்னை விசாரித்தார்களா என்றால் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் பொங்கலூர் பழனிசாமி கணக்கு குறித்து High Value entries குறித்து மட்டுமே என்னிடம் கேட்டார்கள். அது குறித்துத்தான் நான்

கூடுதல் காவல் கண்காணிப்பாளரிடம் சொன்னேன். Ex.P.102 ல் வைப்புத் தொகை ரூ.15,53,496/- எனவும், Withdrawal ரூ.15,00,000/- என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். Ex.P.105 ல் (பக்கம் எண்.6) வைப்புத் தொகை ரூ.40,02,411/- எனவும், Withdrawal ரூ.40,02,411/- என உள்ளது என்றால் சரிதான். Ex.P.104 ல் (பக்கம் 21) ரூ.18,358/- ஆனது சேமிப்பு கணக்கிற்கான வட்டியாக சேர்க்கப்பட்டுள்ளது. Ex.P.103 ல் (பக்கம் 35) 31.3.2010 வரைக்கான Closing balance ஆக ரூ.3,89,812.35 என உள்ளது. அதில் வட்டி தொகை ரூ.1,282/-ம் உள்ளடக்கம் ஆகும். Ex.P.106 ல் 12.6.2012 ஆம் தேதியிட்ட கடிதம் எங்களது வங்கி கிளை மேலாளரால் கோவை மத்திய குற்றப்பிரிவு உதவி ஆய்வாளருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். அதில் மாரிஸ் சிமெண்ட் பிரைவேட் லிமிடெட் கம்பெனியின் 1.4.2004 முதல் 31.3.2006 ஆம் தேதி வரைக்கான கணக்கு விவர அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. Ex.P.106 ல் உள்ள Ex.P.107 ல் (பக்கம் 5) உள்ள மற்ற Entries குறித்து என்னிடம் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் என்னிடம் கேட்கவில்லை. மெசர்ஸ் மாரிஸ் சிமெண்ட் பிரைவேட் லிமிடெட் குறித்த ஒரு Entries குறித்து மட்டுமே கேட்டார்கள். கூடுதல் காவல் கண்காணிப்பாளர் ஒரு குறிப்பிட்ட Entries குறித்த விவரம் வேண்டுமென வங்கி மேலாளரிடமோ அல்லது என்னிடமோ எழுத்து மூலமான வேண்டுகோள் கடிதம் ஏதும் கொடுக்கவில்லை. எங்கள் வங்கி மேலாளர் Ex.P.106, Ex.P.107 ஐ கூடுதல் காவல் கண்காணிப்பாளருக்கு அனுப்பியதாக Ex.P.106 ல் காணப்படவில்லை என்றால் சரிதான். Ex.P.107 ல் (பக்கம் 5) ஒரு காசோலை குறித்த நடவடிக்கைகளை குறித்து மட்டுமே சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அது குறித்த விவரம் மட்டுமே கூடுதல் காவல் கண்காணிப்பாளர் எங்களிடம் கேட்டார். Ex.P.107 ல் அவ்வாறு கூடுதல் காவல் கண்காணிப்பாளர் கேட்டார் என்பதற்கான குறிப்பு ஏதும் இல்லை என்றால் சரிதான். Ex.P.107 (பக்கம் 5) உள்ள கணக்கு விவர அறிக்கையில் மட்டும் காசோலைகளாகவும், ரொக்கமாகவும், எத்தனை Transaction கள் நடந்துள்ளது என்றால் 20 transaction கள் நடந்துள்ளது. அதில் இரண்டு கடன் நடவடிக்கைகள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளன. மேற்படி பக்கம் 5 ல் மாரிஸ் சிமெண்ட் பிரைவேட் லிமிடெட் எவ்வளவு வைப்பீடு செய்துள்ளது என்றால் ரூ.74,26,791/- வைப்பீடு ஆகியுள்ளது. அதில் Withdrawal எவ்வளவு செய்யப்பட்டிருக்கிறது என்றால் ரூ.93,16,891/- Withdrawal செய்யப்பட்டுள்ளது. மெசர்ஸ் மாரிஸ் சிமெண்ட் பிரைவேட் லிமிடெட்

கம்பெனியின் உரிமயாளர்கள், இயக்குனர்களின் விவரங்கள் எனக்குத் தெரியாது. மேற்படி மாரிஸ் சிமெண்ட் பிரைவேட் லிமிடெட்டின் கணக்கு விவர அறிக்கைகள் எந்த தேதியிலிருந்து எந்த தேதி வரை கொடுக்கப்பட்டுள்ளது என்றால் 1.4.2004 ஆம் தேதியிலிருந்து 31.3.2006 ஆம் தேதி வரைக்குமான கணக்கு விவர அறிக்கைகள் கொடுக்கப்பட்டுள்ளது. கூடுதல் காவல் கண்காணிப்பாளர் என்னை எந்த தேதியில் விசாரித்தார் என்றால் 2012 ஆம் வருடம் பிப்ரவரி மாதம் விசாரித்தார். கூடுதல் காவல் கண்காணிப்பாளர் விசாரணையில் 16.9.2004 ஆம் தேதி அன்று சேமிப்பு கணக்கு எண்.001601507007 துவக்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி கணக்கில் 13.5.2006 ஆம் தேதி அன்று இருப்பு தொகையாக ரூ.1,54,603/- நிலுவைாக இருந்துள்ளது என்றும், 31.3.2010 ஆம் தேதி அன்று ரூ.3,89,812/- இருப்பாக நிலுவையில் இருந்துள்ளது என்றும் சொல்லியுள்ளேனா என்றால் சரிதான், கணக்கு 16.9.2003 ஆம் தேதியில் துவக்கப்பட்டதாகவும் சொல்லியுள்ளேன். சட்டத்துறையின் அனுமதி பெற்று, பொங்கலூர் பழனிசாமி, திருமதி வித்தியா கோகுல், திரு.பாலன் ஆகியோரது கணக்கு வழக்குகள் பற்றி கூடுதல் காவல் கண்காணிப்பாளர் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் பொங்கலூர் பழனிசாமி குறித்த கணக்கு வழக்குகளைப் பற்றித்தான் கேட்டார்கள். கூடுதல் காவல் கண்காணிப்பாளர் கேட்ட விவரத்தைதான் நான் சொன்னேன். 31.3.2010 ஆம் தேதி அன்று வரையான காலத்திற்கு நிகர வட்டியாக ரூ.24,023/- கணக்கில் சேர்க்கப்பட்டுள்ளது எனச் சொல்லியுள்ளேனா என்றால் ஒவ்வொரு ஆறுமாதத்திற்கும் வட்டி சேர்க்கப்பட்டதாகச் சொல்லியு்ளேன். சேர்ந்த வட்டி தொகையை கூட்டிச் சொல்லவில்லை. 27.9.2008 ஆம் தேதி அன்று மாரிஸ் சிமெண்ட் பிரைவேட் லிமிடெட் கம்பெனி கணக்கிலிருந்து காசோலை எண்.117752 ன்மூலம் ரூ.10 லட்சம் வழங்கப்பட்டுள்ளது என சொல்லியுள்ளேனா என்றால் ஆம் சொல்லியுள்ளேன். கூடுதல் காவல் கண்காணிப்பாளர் விசாரணையில் இந்த கணக்கின் மூலம் 27.8.2007 ஆம் தேதி அன்று குறுகிய கால கணக்கு வைப்பு எண்.034214002680 துவங்கப்பட்டு ரூ.40 லட்சம் வைப்புத் தொகையாக செலுத்தப்பட்டு 6.3.2007 ஆம் தேதி அன்று கணக்கு முடிக்கப்பட்டு வைப்புத் தொகை திரும்பப் பெறப்பட்டுள்ளது என சொல்லியுள்ளேனா என்றால் சரிதான். கூடுதல் காவல் கண்காணிப்பாளர் விசாரணையில் எங்களது வங்கி காசோலை எண்.463717 மாரிஸ் சிமெண்ட் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி காசோலையானது 3.4.2004 அன்று ரூ.20 லட்சம் தொகைக்கு

காசாக்கப்பட்டுள்ளது என்று சொல்லியுள்ளேனா என்றால் தற்பொழுது நினைவில்லை. 3.4.2004 ஆம் தேதி ரூ.20 லட்சம் காசோலை எண்.144205 சக்தி பிலிம்ஸ் என்ற பெயருக்கு எங்கள் வங்கி காசோலை மூலமாக (Clearing) சென்றுள்ளது என முதல் விசாரணையில் நீதிமன்றத்தில் சொல்லும் சங்கதியை கூடுதல் காவல் கண்காணிப்பாளர் விசாரணையில் தெரிவித்தேனா என்றால் தெரிவித்தேன். காசோலை எண்.463717 என்பது பற்றி மாரிஸ் சிமெண்ட் பிரைவேட் லிமிடெட்டிற்கு வழங்கப்பட்டது சம்மந்தமாக என்னிடம் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் விசாரித்தாரா என்றால் அது குறித்து விசாரித்ததாக தற்பொழுது எனக்கு நினைவில் இல்லை. சக்தி பிலிம்ஸ் கணக்கு விவரம் பற்றித்தான் என்னிடம் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் கேட்டது நினைவில் உள்ளது. எங்களது வங்கி கிளை மேலாளரை கூடுதல் காவல் கண்காணிப்பாளர் விசாரித்தாரா என்ற விவரம் எனக்குத் தெரியாது. Ex.P.106 மற்றும் Ex.P.107 கோப்புகள் உதவி ஆய்வாளர் மத்திய குற்றப்பிரிவுக்கு அனுப்பப்பட்டதாகத்தான் உள்ளது என்றால் அவ்வாறுதான் உள்ளது. ஆனால் அது பற்றி எனக்குத் தெரியாது.

<u>மறு விசாரணை</u> இல்லை

ஒம்/வித்தியமீனா